**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**M.C.O.P.122/2023**

**CNR.No.TNCB19000**

| Deposition | : | PW.1 |
|---|---|---|
| Name | : | கிருஷ்ணவேணி |
| Father's / Husband Name | : | சண்முகசுந்தரராஜன் |
| Village / முகவரி | : | சிக்கதாசம்பாளையம் |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Age / வயது | : | |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 5th March 2026

**முதல் விசாரணை**

நான் சிக்கதாசம்பாளையம் , மேட்டுப்பாளையத்தில் வசிக்கிறேன் . நான் வழக்கின் மனுதாரர் ஆவேன் . முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் . படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.**

| வ. எண். | தேதி | ஆவண விபரம் | ஆவணத்தின் தன்மை | ஆவண வரிசை |
|---|---|---|---|---|
| 1 | | காயச்சான்றிதழ் | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.1 |
| 2 | | டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் | ம.சா.ஆ.2 |
| 3 | | மருத்துவ பில்கள் ( ரூ.19,544/- | அசல் | ம.சா.ஆ.3 |
| 4 | | எனது ஆதார் அடையாள அட்டை | நகல் | ம.சா.ஆ.4 |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தின் போது நான் வீட்டு குடித்தனம் செய்து வந்தேன் .. .விபத்து எப்படி நடந்தது என்றால் அன்னூரில் இருந்து மேட்டுப்பாளையம் நோக்கி நானும் எனது கணவரும் எங்களது மகளுடன் இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தோம் . எனது கணவர் இரு சக்கர வாகனத்தை ஓட்டினார் . எனது மகளுக்கு கையில் அடிபட்டிருந்ததால் சிகிச்சை பெற்று விட்டு சென்று கொண்டிருந்தோம் . அப்போது அரசு போக்குவரத்து வாகனம் என்னை முந்திக் கொண்டு சென்று எங்கள் மீது மோதி அதற்கு முன்பாக சென்று கொண்டிருந்த ஆட்டோ மீது மோதி விபத்து ஏற்பட்டது.

எங்கள் மூவருக்கும் அடிபட்டதால் ஆட்டோவிற்கு என்ன ஆனது என்று எங்களுக்கு தெரியாது. ஆட்டோ எங்களுக்கு முன்பாக சென்று கொண்டிருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . நான் சிகிச்சையில் இருக்கும்போது எங்கள் மீது மோதிய பேருந்து ஆட்டோ மீதும் மோதியதாக சொன்னார்கள் . ஆட்டோதான் எங்கள் வாகனத்தின் மீது மோதியது என்றால் சரியல்ல . பேருந்தின் எந்த பகுதி எங்கள் வாகனத்தின் மீது மோதியது என்றால் பேருந்தின் முன்பகுதி மோதியது . எனது வாகனத்திற்கு பின்னால் ஆட்டோ வந்து கொண்டிருந்தது என்றும் மேற்கண்ட ஆட்டோ எனது வாகனத்தை முந்திக்கொண்டு அஜாக்கிரதையாகவும் அதிவேகமாகவும் சென்று இடது பக்கமாக திரும்பும்போது எனது வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

எனது கணவர் தனியாக இழப்பீடு கேட்டு எம் சி ஓ பி எண் .120/2023 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது மகள் தனியாக இழப்பீடு கேட்டு எம் சி ஓ பி எண் .121/2023 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் . மூன்று வழக்குகளுக்கும் ஒரே விபத்தினால் ஏற்பட்டது என்றால் சரிதான் . நாங்கள் மூவரும் ஒரே இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்தோம் . நாங்கள் சென்ற வாகனத்தின் பதிவு எண் . TN 40 P 1508 . எனது கணவர் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . எனது கணவர் மட்டும் தலைக்கவசம் அணிந்திருந்தார்.

எனக்கு விபத்து நடக்கும்போது வயது 52. எனது கணவருக்கு விபத்து நடந்தபோது வயது 60. எனது வருமானத்தை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மருத்துவ பில்களை மெடிகிளைம் மூலமாக பெற்றுக் கொண்டேன் .

இரு சக்கர வாகனத்தில் நாங்கள் மூன்று நபர்கள் வராமல் இரண்டு நபர்கள் மட்டும் வந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல.

எனது கணவர் சாலை விதிகளை கடைப்பிடிக்காமல் வாகனத்தை ஓட்டி சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல . விபத்துக்கு காரணம் ஆட்டோவை ஓட்டிய ஓட்டுநர்தான் என்றும் இந்த வழக்கிற்கும் எதிர்மனுதாரர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல . விபத்து குறித்து சரியாக தெரியவில்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தவறான தகவலின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . விபத்துக்கும் எதிர்மனுதாரர்களுக்கும் சம்பந்தம் இல்லையென்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்